**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No. 338/2018**
**Deposition of witness for prosecution –PW-7**

| | | |
|---|---|---|
| Name | : | பைசல் அகமது |
| Father Name | : | அயூப் கான் |
| Village | : | காந்தி நகர் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | பெயிண்டிங் கான்டிராக்டர் |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 04th day of February 2026.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து பெயின்டிங் கான்டிராக்டராக வேலை செய்து வருகிறேன். 2018 ம் வருடம் ஒரு நாள் மாலை 06.30 மணியை போல விபத்து நடந்ததாக நான் கேள்விப்பட்டு தேவிப்பட்டிணம் அரசு மருத்துவமனை அருகே வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாக சொன்னார்கள். அதில் நானும் பிரபாகரனும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்து போன ஆறுமுகம் எனது உறவினர் என்றால் சரிதான். நானும் ஆறுமுகமும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். போலீசார் எத்தனை பேர் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் வரைபடத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வரைபடத்தில் நான் கையொப்பம்

செய்தேன். அந்த வரைபடத்தில் இறந்து போனவரின் ரத்தம் கிடந்ததாக குறிப்பிட்டிருந்ததா என்றால் சரியாக கவனிக்கவில்லை. அந்த இடத்தில் வாகனத்தில் உடைந்த பகுதி கண்ணாடி துகள்கள் ஏதும் கிடந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்குவதற்கு 07.00 மணிக்கு மேல் இருட்டி விட்டது. அப்போது தான என்னிடமும் பிரபாகரன் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் எழுதியதில் தான் கையொப்பம் செய்தேன். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அதில் என்ன எழுதியது என்பது தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. ரோட்டிற்கு மேற்கே ஊரணி உள்ளது என்றால் சரிதான். ஊரணிக்கு எதிராக தான் எங்கள் ஊருக்கு செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். என் ஊரில் இருந்து ஊரணிக்கு செல்ல வேண்டும் என்றால் அந்த ரோட்டை கடந்து தான் செல்ல வேண்டும். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்தை காலை 09.00 மணிக்கு நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னது தவறு என்றால் சரிதான். பார்வை மகஜரில் கண்ணாடி உடைந்த விவரம் ரத்தம் கிடந்த விவரம் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். தேவிப்பட்டிணம் காவல் நிலையத்திற்கு நான் சென்றுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்ற போது அங்கு வைத்து எதுவும் சொல்லாமல் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. இறந்து போன ஆறுமுகம் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை
இல்லை.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.